CENTENARY OF SERVICE

ALL CEYLON JAMIYYATHUL ULAMA

# கைப்பேசி, இணையம் மற்றும் சமூக ஊடகங்கள்

---

என்ற தலைப்பில் இவ்வார குத்பாவினை அமைத்துக் கொள்ளுமாறு அனைத்து கதீப்மார்களிடமும் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா கேட்டுக்கொள்கிறது.




+94 117 490 490 | www.acju.lk | All Ceylon Jamiyyathul Ulama (ACJU) | info@acju.lk | @ACJUNews

CENTENARY OF SERVICE

அல்லாஹ் தஆலா எமக்கு வழங்கிய அருட்கொடைகளில் கைப்பேசி, இணையம் மற்றும் சமூக ஊடகங்களும் அடங்குகின்றன. இவற்றை மார்க்கக் கல்வி, உலகக் கல்வி, தொடர்பாடல் மற்றும் நன்மைகளைப் பரப்புதல் போன்றவற்றுக்குப் பயன்படுத்தலாம். அதேநேரம், தவறான பயன்பாடு நேர விரயம், பாவங்கள், ஒழுக்கக்கேடுகள் மற்றும் சமூகப் பிரச்சினைகளுக்கு வழிவகுக்கலாம்.

அல்லாஹ் தஆலா கூறுகின்றான்:

وَإِنْ تَعُدُّوا نِعْمَةَ اللَّهِ لَا تُحْصُوهَا (سورة النحل: ١٨)

“நீங்கள் அல்லாஹ்வின் அருட்கொடைகளை எண்ணினால், அவற்றை உங்களால் எண்ணி முடிக்க முடியாது.”

எனவே, இவ்வருட்கொடைகளை நன்மைக்காகப் பயன்படுத்துவது நமது பொறுப்பாகும்.

## கைப்பேசியும் இணையமும் அல்லாஹ்வின் அருட்கொடைகளே!

இன்றைய காலத்தில் அல்லாஹ் நமக்கு வழங்கியுள்ள முக்கியமான வசதிகளில் கைப்பேசி, இணையம் மற்றும் சமூக ஊடகங்களும் அடங்குகின்றன.

இவற்றின் மூலம் தொலைவில் இருப்பவர்களுடன் தொடர்புகொள்ளலாம். உறவினர்கள், நண்பர்கள் மற்றும் சமூகத்தினருடன் தொடர்புகளைப் பேணலாம். உலகச் செய்திகளை அறிந்துகொள்ளலாம். மார்க்கக் கல்வியையும் உலகக் கல்வியையும் பெற்றுக்கொள்ளலாம். பயனுள்ள அறிவைப் பகிரலாம். நன்மையான செய்திகளைப் பரப்பலாம். அல்லாஹ்வின் மார்க்கத்தை மக்களிடம் எடுத்துரைக்கவும் முடியும்.

ஆனால், இத்தகைய அருட்கொடைகளைப் பலர் தவறான வழிகளில் பயன்படுத்துகின்றனர். பாவங்கள், தீமைகள், இச்சைகள், தவறான சிந்தனைகள் மற்றும் குழப்பங்களைப் பரப்புவதற்கும் இவற்றைப் பயன்படுத்துகின்றனர்.

இதனால் ஆண்களும் பெண்களும், பெரியவர்களும் சிறியவர்களும் பல்வேறு வழிகேடுகளுக்கு உள்ளாகின்றனர்.

## கைப்பேசி, இணையம் மற்றும் சமூக ஊடகங்களை பாவிக்கும் போது கடைப்பிடிக்க வேண்டிய முக்கிய ஒழுங்குகள்

### 01. நேரத்தைப் பாதுகாத்தல்

இன்று பலர் கைப்பேசி மற்றும் சமூக ஊடகங்களில் அளவுக்கு அதிகமான நேரத்தைச் செலவிட்டு, தொழுகை, கல்வி, வேலை மற்றும் குடும்பப் பொறுப்புகளில் அலட்சியம் காட்டுகின்றனர்.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

عَنِ ابنِ عباسٍ - رضي اللهُ عنهما - قال: قال رسولُ اللهِ صلَّى اللهُ عليه وسلَّم: « نِعمَتانِ مغبونٌ فيهما كثيرٌ من الناسِ: الصَّحَّةُ والفَّراغُ» (صحيح البخاري : ٦٤١٢)

“இரண்டு அருட்கொடைகளின் விடயத்தில் பலர் நஷ்டமடைந்தவர்களாக இருக்கின்றனர். அவை ஆரோக்கியமும் ஓய்வு நேரமுமாகும். (ஸஹீஹுல் புகாரி: 2412)

எனவே, தேவையற்ற காணொளிகள் மற்றும் பயனற்ற உரையாடல்களில் நேரத்தை வீணாக்காமல், நற்செயல்களில் ஈடுபடுவோம். கைப்பேசிப் பயன்பாட்டினால் ஐவேளைத் தொழுகைகளும் குறிப்பாக சுப்ஹுத் தொழுகையும் பாதிக்கப்படாதவாறு கவனமாக இருப்போம்.

### 02. பார்வையையும் ஒழுக்கத்தையும் பாதுகாத்தல்

கைப்பேசி மற்றும் இணையத்தில் காணப்படும் ஆபாசமான படங்கள், ஒழுக்கக்கேடான காணொளிகள், தடைசெய்யப்பட்ட தொடர்புகள் போன்றவற்றிலிருந்து நம்மைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

அல்லாஹ் தஆலா கூறுகின்றான்:

قُلْ لِلْمُؤْمِنِينَ يَغُضُّوا مِنْ أَبْصَارِهِمْ وَيَحْفَظُوا فُرُوجَهُمْ (سورة النور: ٣٠)

“மு.:.மின்களான ஆண்கள் தமது பார்வைகளைத் தாழ்த்திக்கொள்ளுமாறும், தமது கற்பைப் பாதுகாத்துக்கொள்ளுமாறும் கூறுவீராக!”

தனிமையில் கைப்பேசியைப் பயன்படுத்தும் போதும் அல்லாஹ் நம்மைப் பார்த்துக்கொண்டிருக்கின்றான் என்பதை நினைவில் கொள்வோம்.

03. செய்திகளை உறுதிப்படுத்திப் பகிர்தல்

சமூக ஊடகங்களில் பரவும் அனைத்துச் செய்திகளும் உண்மையானவை அல்ல. பொய்யான செய்திகள், அவதூறுகள், திரிக்கப்பட்ட காணொளிகள் மற்றும் செயற்கை நுண்ணறிவின் மூலம் உருவாக்கப்பட்ட போலியான உள்ளடக்கங்கள் காணப்படலாம்.

அல்லாஹ் தஆலா கூறுகின்றான்:

﴿ يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا إِنْ جَاءَكُمْ فَاسِقٌ بِنَبَإٍ فَتَبَيَّنُوا أَنْ تُصِيبُوا قَوْمًا بِجَهَالَةٍ فَتُصْبِحُوا عَلَىٰ مَا فَعَلْتُمْ نَادِمِينَ ( سورة الحجرات: ٦)

"ஈமான் கொண்டவர்களே! ஒரு தீயவர் உங்களிடம் ஒரு செய்தியைக் கொண்டுவந்தால், அறியாமையினால் ஒரு சமூகத்திற்குத் தீங்கு செய்துவிட்டு, பின்னர் நீங்கள் செய்ததற்காகக் கைசேதப்படாதிருப்பதற்காக, அதை நன்கு விசாரித்து உண்மையைத் தெளிவுபடுத்திக்கொள்ளுங்கள்."

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

عن أبي هريرة رضي اللهُ عنه قال: قال رسول الله ﷺ: كفى بالمرء كذبًا أن يحدِّث بكلِّ ما سمع (مقدمة صحيح مسلم،: ٥)

"ஒருவர் தான் கேள்விப்பட்ட அனைத்தையும் எடுத்துரைப்பதே அவர் பொய்யுரைப்பவராக இருப்பதற்குப் போதுமானதாகும்."

எனவே, ஒரு செய்தியைப் பகிர்வதற்கு முன்னர் அதன் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்துவோம். பிறருடைய கண்ணியத்தைப் பாதிக்கும் அவதூறுகளையும் ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளையும் பரப்புவதைத் தவிர்ப்போம்.

நபி ﷺ அவர்கள் மேலும் கூறினார்கள்:

عن أبي هريرة رضي الله عنه: أن رسول الله صلى الله عليه وسلم قال مَنْ كَانَ يُؤْمِنُ بِاللَّهِ وَالْيَوْمِ الْآخِرِ فَلْيَقُلْ خَيْرًا أَوْ لِيَصْمُتْ» (صحيح البخاري : ٦٠١٨)

"அல்லாஹ்வையும் மறுமை நாளையும் நம்பியவர் நல்லதைப் பேசட்டும் அல்லது மௌனமாக இருக்கட்டும்."

இவ்வழிகாட்டல் நாம் சமூக ஊடகங்களில் எழுதும் கருத்துகளுக்கும் அனுப்பும் செய்திகளுக்கும் பொருந்தும்.

### 04. நன்மைகளைப் பரப்புதல்

கைப்பேசியையும் இணையத்தையும் மிக தேவையான சந்தர்ப்பத்தில் தீனுடைய விடயங்களைக் கற்றல், பயனுள்ள கல்விசார் தகவல்களைப் பகிர்தல் மற்றும் சமூக நலனுக்கான பணிகளை முன்னெடுத்தல் போன்றவற்றுக்குப் பயன்படுத்துவோம்.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

**عن أبي مسعود عقبة بن عمرو الأنصاري البدري - رضي الله عنه - قال: قال رسول الله - صلى الله عليه وسلم مَنْ دَلَّ عَلَى خَيْرٍ فَلَهُ مِثْلُ أَجْرِ فَاعِلِهِ. (صحيح مسلم : ١٨٩٣)**

“ஒருவர் ஒரு நன்மைக்கு வழிகாட்டினால், அந்த நன்மையைச் செய்பவருக்குக் கிடைக்கும் நன்மையைப் போன்றது அவருக்கும் கிடைக்கும்.”

எனவே, நம்பகமான மார்க்க அறிவையும் நல்லுபதேசங்களையும் பகிர்ந்து நன்மைகளைப் பரப்புவோம். சூதாட்டம், மோசடிகள் மற்றும் தடைசெய்யப்பட்ட செயல்பாடுகளிலிருந்து விலகுவோம். பிறருடைய தனிப்பட்ட தகவல்களையும் படங்களையும் அவர்களது அனுமதியின்றிப் பகிர்வதைத் தவிர்ப்போம்.

### 05. பிற மதத்தவர்களின் உணர்வுகளை மதித்தல்

நாம் வாழும் நாட்டிலும் சமூகத்திலும் மாற்று மதங்களைச் சேர்ந்த சகோதரர்கள் எம்முடன் வாழ்கின்றார்கள். எனவே, சமூக ஊடகங்களில் பதிவுகளை வெளியிடும்போது பொறுப்புணர்வுடன் நடந்துகொள்ள வேண்டும்.

எமது பதிவுகள் பிற மதத்தவர்களின் மத உணர்வுகளைத் தேவையின்றிப் புண்படுத்தும் வகையில் அமையக்கூடாது. அவர்களது வழிபாட்டுப் பொருட்களையும் மத அடையாளங்களையும் இழிவுபடுத்துவதைத் தவிர்க்க வேண்டும்.

அல்லாஹ் தஆலா கூறுகின்றான்:

**وَلَا تَسُبُّوا الَّذِينَ يَدْعُونَ مِنْ دُونِ اللَّهِ فَيَسُبُّوا اللَّهَ عَدْوًا بِغَيْرِ عِلْمٍ ( سورة الأنعام: ١٠٨)**

“அல்லாஹ்வையன்றி அவர்கள் அழைப்பவற்றை நீங்கள் ஏசாதீர்கள். அவ்வாறாயின், அவர்கள் அறியாமையின் காரணமாக வரம்புமீறி அல்லாஹ்வை ஏசுவார்கள்.”

எமது அன்பிற்குரிய நபி முஹம்மத் ﷺ அவர்களின் கண்ணியத்தையும் பாதுகாக்க வேண்டும். அவர்களைப் பற்றிய அவதூறுகளையும் இழிவுபடுத்தல்களையும் பரப்பக்கூடாது.

அல்லாஹ் தஆலா கூறுகின்றான்:

**ادْعُ إِلَىٰ سَبِيلِ رَبِّكَ بِالْحِكْمَةِ وَالْمَوْعِظَةِ الْحَسَنَةِ وَجَادِلْهُم بِالَّتِي هِيَ أَحْسَنُ (سورة النحل: ١٢٥)**

“உமது இறைவனின் பாதையின் பக்கம் ஞானத்துடனும் அழகிய உபதேசத்துடனும் அழைப்பீராக! அவர்களுடன் மிக அழகிய முறையில் விவாதிப்பீராக!”

எனவே, நபி ﷺ அவர்களின் அழகிய பண்புகளையும் போதனைகளையும் எடுத்துக்காட்டி, அறிவுடனும் நற்பண்புடனும் இஸ்லாத்தை எடுத்துரைப்போம்.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

**عن عبدالله بن عمرو بن العاص رضي الله عنهما عن النبي صلى الله عليه وسلم قال الْمُسْلِمُ مَنْ سَلِمَ الْمُسْلِمُونَ مِنْ لِسَانِهِ وَيَدِهِ» (صحيح البخاري: ١٠)**

“தனது நாவிலிருந்தும் கையிலிருந்தும் ம்லிம்கள் பாதுகாப்புப் பெறுபவரே முஸ்லிம் ஆவார்.”

இது முஸ்லிம்களுக்கிடையிலான ஒழுக்கத்தை எடுத்துரைக்கும் ஹதீஸாகும். பிறருக்குத் தீங்கு விளைவிக்காமையும் அவர்களது கண்ணியத்தை மதிப்பதும் எமது சமூகப் பொறுப்பாகும்.

ஒரு பதிவை வெளியிடுவதற்கு முன்னர், “இது உண்மையானதா? யாருடைய கண்ணியத்தையாவது பாதிக்குமா? சமூகத்தில் அமைதியை வளர்க்குமா அல்லது பகைமையை ஏற்படுத்துமா?” என்று சிந்திப்போம்.

எமது ஒரு பதிவு இஸ்லாத்தைப் பற்றிய தவறான எண்ணத்தை ஏற்படுத்தக்கூடாது. அல்லாஹ்வின் மார்க்கத்திற்கும் நபி ﷺ அவர்களின் கண்ணியத்திற்கும் பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் நாம் நடந்துகொள்ளக்கூடாது.

### 06. குடும்பத்தையும் உடல் நலத்தையும் பேணுதல்

கைப்பேசியின் அளவுக்கு மீறிய பயன்பாடு தூக்கம், கவனம், கல்வி, வேலை மற்றும் குடும்ப உறவுகளைப் பாதிக்கக்கூடும்.

எனவே, கைப்பேசிப் பயன்பாட்டிற்கு நேர வரம்பை ஏற்படுத்துவோம். குடும்பத்தினருடன் உரையாடும்போதும் குழந்தைகளுடன் நேரம் செலவிடும்போதும் கைப்பேசியை ஒதுக்கிவைப்போம். குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கு நல்ல முன்மாதிரியாக இருப்போம். நமது கைப்பேசி நமது கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் நாம் கைப்பேசியின் கட்டுப்பாட்டில் இருக்கக்கூடாது.

நமது தொழுகைகள், குடும்பப் பொறுப்புகள், மார்க்கக் கடமைகள் மற்றும் நல்லொழுக்கம் ஆகியவற்றைப் பாதிக்காத வகையில் கைப்பேசி, இணையம் மற்றும் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவோம்.

### 07. பிறரது மானத்தையும் கண்ணியத்தையும் பாதுகாத்தல்

ஒருவர் தவறு செய்யும்போது, அவரது தவறை மார்க்கம் கற்றுத்தந்த வழிமுறைகளுக்கு ஏற்ப, உரிய முறையில் அறிவுரை கூறித் திருத்த முயற்சிப்பதே ஒரு மு∴மினின் பண்பாகும். ஆனால், இன்று சிலர் ஒருவருடைய தவறுகளைத் திருத்துவதற்குப் பதிலாக, அவரது குறைகளைச் சமூக வலைத்தளங்களில் பகிர்ந்து, பொதுமக்கள் மத்தியில் அவரது மானத்தையும் கண்ணியத்தையும் குலைக்கின்றனர்.

சில சந்தர்ப்பங்களில், இத்தகைய செயல்கள் தவறைத் திருத்துவதற்காக அல்லாமல், தனிப்பட்ட பகைமையைத் தீர்த்துக்கொள்வதற்காகவும், பழிவாங்குவதற்காகவும், ஒருவரை அவமானப்படுத்தி அவரது நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்துவதற்காகவும் மேற்கொள்ளப்படுகின்றன. இத்தகைய பழிவாங்கும் மனப்பான்மையும், பிறரது மானத்தையும் கண்ணியத்தையும் பொதுவெளியில் குலைக்கும் செயல்களும் இஸ்லாமிய ஒழுக்கங்களுக்கு முரணானவையாகும்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்:

**عن أبي هريرة رضي الله عنه قال: قال رسول الله صلى الله عليه وسلم: ...ومن ستر مسلمًا ستره الله في الدنيا والآخرة، (صحيح مسلم 2699)**

“யார் ஒரு முஸ்லிமின் குறையை மறைக்கிறாரோ, அவருடைய குறையை அல்லாஹ் இம்மையிலும் மறுமையிலும் மறைப்பான்.” (ஸஹீஹ் முஸ்லிம்: 2699)

மேலும், நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தமது இறுதி ஹஜ்ஜான ஹஜ்ஜத்துல் வதாவின் உரையின்போது, மனிதர்களின் உயிர், செல்வம் மற்றும் மானத்தின் புனிதத்துவத்தை வலியுறுத்தினார்கள்:

**عَنْ أَبِي بَكْرَةَ رضي الله عنه، قَالَ: خَطَبَنَا رَسُولُ اللهِ صلى الله عليه وسلم يَوْمَ النَّحْرِ، فَقَالَ: ... فَإِنَّ دِمَاءَكُمْ، وَأَمْوَالَكُمْ، وَأَعْرَاضَكُمْ، بَيْنَكُمْ حَرَامٌ، كَحُرْمَةِ يَوْمِكُمْ هَذَا، فِي شَهْرِكُمْ هَذَا، فِي بَلَدِكُمْ هَذَا، إِلَى يَوْمِ تَلْقَوْنَ رَبَّكُمْ،... (صحيح مسلم 1679)**

அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள், நஹ்ருடைய (துல்ஹஜ் 10ஆம்) நாளில் எங்களுக்கு உரை நிகழ்த்தினார்கள். அப்போது அவர்கள் கூறினார்கள்:

“நிச்சயமாக, உங்களுடைய உயிர்களும், உங்களுடைய செல்வங்களும், உங்களுடைய மானங்களும் உங்களுக்கிடையில் புனிதமானவையாகும். இந்த நாளுக்கு, இந்த மாதத்தில், இந்த நகரத்தில் எவ்வளவு புனிதத்துவம் உள்ளதோ, அதேபோன்று அவையும் புனிதமானவையாகும். நீங்கள் உங்கள் இறைவனைச் சந்திக்கும் நாள் வரை (அந்தப் புனிதத்துவம் நிலைத்திருக்கும்).”

எனவே, ஒருவருடைய தவறைக் கண்டால், அவரைத் தனிப்பட்ட முறையில் அணுகி, அன்புடனும் நிதானத்துடனும், அல்லாஹ்வைப் பயந்தவர்களாகவும் அறிவுரை கூறுவோம். தவறைத் திருத்துவதே எமது நோக்கமாக இருக்க வேண்டும் பழிவாங்குவதோ, அவமானப்படுத்துவதோ, அவரது மானத்தைக் குலைப்பதோ எமது நோக்கமாக இருக்கக்கூடாது.

சமூக வலைத்தளங்களில் எந்தவொரு செய்தியையும் பகிர்வதற்கு முன்னர், அது உண்மையானதா, அதனைப் பகிர்வது நியாயமானதா, அதனால் ஒருவருக்கு அநீதி இழைக்கப்படுமா என்பதைச் சிந்தித்துச் செயல்படுவோம்.

அதேவேளை, பிறருக்குப் பாதிப்பு ஏற்படுவதைத் தடுப்பதற்காக அல்லது உரிய பொறுப்புடையவர்களிடம் ஒரு தவறைத் தெரிவிப்பதற்காக நியாயமான முறையில் எச்சரிக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் இருக்கலாம். அத்தகைய சந்தர்ப்பங்களிலும் உண்மையையும் நீதியையும் மார்க்க வரம்புகளையும் பேணுவோம். பிறரது மானத்தையும் கண்ணியத்தையும் பாதுகாப்போம்.

# ALL CEYLON JAMIYYATHUL ULAMA (ACJU)

NO. 281, JAYANTHA WEERASEKARA MAWATHA,
COLOMBO 10, SRI LANKA.